முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1068

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.09.2022, வியாழக்கிழமை

1. ஓங்கார பிரம்மமே அரங்கா வாழ்க
ஓங்கார சூட்சுமமே தேசிகா வாழ்க
ஓங்காரன் என் வடிவாக வந்த
உயர் ஞானியே வாழ்க வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 16 நாள், 01.09.2022 வியாழக்கிழமை)
தாழ்விலா அரங்கன் அவதார நோக்கம்
தரணியை ஞானயுகம் ஆக மாற்றுவதே ஆகும்
3. ஆகவே அரங்கன் சேவை உலகம் அறியப்பட்டால்
அறிவிப்பேன் சடுதி உலக மாற்றம் நடக்கும்
மிகைபட மக்களெல்லாம் உணர்ந்து தெளிந்து
முருகா அரங்கா என வேண்டி வந்தால்
4. வந்த உடன் இந்த உலகத்தில் ஞான ஆட்சி
வல்லமைபட மனிதர்கள் ஆட்சி முடிவு கண்டு மாற்றமாக நிகழக்கூடும்
கூடவே ஞானதேசிகன் காட்டுகின்ற ஞானமெல்லாம்
குமரகுருபரன் யான் தரும் ஞானமாகும்
5. ஈடேற்றம் பெற கலியுக மக்களே
இன்னும் காலம் கடத்தா
தடையற பிரணவக்குடில் வந்து
தவசியின் திருவடி பற்றிக்கொண்டு
6. பற்றியே அரங்கன் தரும் சன்மார்க்க
பரோபகார ஞானத்தை ஏற்றுக்கொண்டு
ஏற்றுமே தடையற உலகோர்
இந்த ஞானத்தை உலகமெங்கும் பரப்பி
7. தயவாக ஜீவகாருண்ய நிலையாக
தரணி எங்கும் நிலைத்தன்மை பெருக
அவனியே பெரும் பாதுகாப்பு பெறும்
அரங்கனால் அகில மாற்றமாக இனிதே நடந்தேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–